அங்கே கலப்படம் செய்வதாக ஒரு நிலைமை இருக்கின்ற காரணத்தால், இந்த டீ வேஸ்டை எங்கிருந்து, எந்த இடத்திற்கு எடுத்துச் செல்கிறார்களோ அப்படி எடுத்துச் செல்கிறபோது ஒரு டிஸ்போசபிள் ஸ்லிப்பைக் கொடுத்து, அதை நம்முடைய அரசாங்கத்தினுடைய கவனத்திற்கும் கொண்டு வந்தால் இதைத் தடுக்கலாம் என்று நான் நினைக்கிறேன். இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆய்வு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டீ வேஸ்ட் மட்டும் கலப்படம் செய்யப்படுவதாக உறுப்பினர்கள் சொன்னார்கள். இன்னும் பல்வேறு பொருட்களைக் கலப்படம் செய்வதாகவும் சிலர் சொல்கிறார்கள். எனவே, அத்தனையையும் பட்டியல் போட்டு, இவைகள் கலப்படம் செய்யப்படுகின்றன, இதைக் கவனிக்க வேண்டும், இதைச் சரியாகப் பார்க்க வேண்டுமென்று சொல்லி, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு நாம் தெரிவிக்கலாம். எனவே, இதிலே என்னென்ன கலப்படம் செய்யப்படுகிறது--இது ஒன்று மட்டுமல்ல; இப்பொழுது நாம் டீயைப் பற்றி மட்டும் பேசிக் கொண்டிருக்கிறோம்; பல்வேறு காரியங்களுக்காகப் பல்வேறு பொருட்களைக் கலப்படம் செய்வதற்கான முயற்சிகள் ஒவ்வொரு மட்டத்திலும் எடுக்கப்படுகின்றன. அதை அரசாங்கம் தடுத்துக் கொண்டு வந்திருக்கிறது. எனவே--இதில் எந்த அளவிற்கு அதைக் கட்டுப்படுத்த முடியுமோ அதற்கு நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, டாக்டர் வெ. புருஷோத்தமன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

6—

சென்னை-ஒகேனக்கல்லுக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்குதல்.

***34283-டாக்டர் வெ. புருஷோத்தமன் :**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னையிலிருந்து ஒகேனக்கல்லுக்கு இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

1994 நவம்பர் 4]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஒகேனக்கல்-சென்னை வழித்தடத்தில் 24-10-91 முதல் 11-10-92 முடிய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்கப்பட்டு வந்தது. இந்த வழித்தடத்தில் ஈட்டிய வருவாயும் பயன்படுத்திய பயணிகளின் விகிதாசாரமும் குறைவாக இருப்பதால் இவ்வழித்தடம் நிறுத்தப்பட்டது. இத்தடத்தை மீண்டும் இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

முற்பகல் 10-20

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியை உள்ளடக்கிய தர்மபுரி மாவட்டத்தின் மிக முக்கியமான சுற்றுலாத் தலமாக விளங்குவது ஒகேனக்கல். இந்த ஒகேனக்கல்லுக்கு சென்னையிலிருந்து, கிருஷ்ணகிரி, பாலக்கோடு வழியாக இயக்கப்பட்டு வந்த தடம் எண் 421 என்ற பேருந்து, நஷ்டம் வந்த காரணத்தினால், நிறுத்தப்பட்டு ஓராண்டிற்கு மேலாகிறது. முக்கியமான சுற்றுலாத் தலமாக அது இருக்கிற காரணத்தினாலும், என்னுடைய தொகுதியிலே ஓடுகிற ஒரே திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து என்ற காரணத்தினாலும், ஒகேனக்கல்லிலிருந்து தர்மபுரி வழியாக, சென்னைக்கு மீண்டும் அதனை இயக்குவதற்குச் சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுகிறபோதே, அதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லையென்று குறிப்பிட்டேன். பயணிகளினுடைய விகிதாச்சாரத்தை நான் குறிப்பிட்டுக் காட்டுகிறபோது, ஒரு கிலோமீட்டருக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் 'செமி டீலக்ஸ்' பேருந்தை இயக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தது ஏழு ரூபாயாவது வருமானம் ஈட்டியாக வேண்டும். ஜனவரி 1992-லே பார்க்கிறபோது, 4 ரூபாய் 16 பைசா; பிப்ரவரியிலே 4 ரூபாய் 56 பைசா; மார்ச்சிலே 3 ரூபாய் 85 பைசா; ஏப்ரலிலே 4 ரூபாய் 59 பைசா; அப்படியே குறிப்பிட்டுக் கொண்டுவந்தால், செப்டம்பரிலே 3 ரூபாய் 24 பைசாதான் அதிலே வருமானம் ஈட்டப்பட்டிருக்கிறது. ஆகவேதான், அதனை இயக்குவதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லையென்று குறிப்பிட்டேன். நம்முடைய மாநிலத்திலே இயக்கப்படுகிற

'செமி-டீலக்ஸ்' பேருந்திற்குக் கட்டணம் ஒரு கிலோ மீட்டருக்கு 14.5 பைசா. ஆனால், ஆந்திர மாநிலத்திலே அதை 25 பைசாவாக ஒரு கிலோ மீட்டருக்கு இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். கேரள மாநிலத்தில் 25 பைசா; கர்னாடக மாநிலத்தில் 23.17 பைசா; மகாராஷ்டிர மாநிலத்தில் 29.17 பைசா. ஆகவே, எல்லா மாநிலங்களையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, குறைந்த கட்டணத்திலே பேருந்தை இயக்குகிறபோது, அதிலே பயணிகளுடைய எண்ணிக்கைக் குறைவாக இருக்கிறபோது, அதனை இயக்குவதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாவுக்கு வருகிற பயணிகளினுடைய நன்மையைக் கருதி, இப்போது தர்மபுரியிலிருந்து சென்னைக்கு வருகிற 5 பேருந்துகளில், ஒரு பேருந்தையாவது, ஒகேனக்கல்லிலிருந்து சென்னை மார்க்கத்திற்குத் திருப்பி விடுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து ஒகேனக்கல் வரையிலும் நேரடியாகப் பேருந்துகளை இயக்குவதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை. நாம் அதனை இயக்கிப் பார்த்ததற்குப் பிறகுதான் அந்தச் சாத்தியக்கூறுகள் இல்லையென்ற கருத்தை உங்களிடத்திலே குறிப்பிட்டேன். கிருஷ்ணகிரிக்கு அருகாமையிலும், தர்மபுரிக்கு அருகாமையிலும் இருக்கிற காரணத்தினால், பயணிகள், காலை நேரத்திலே செல்கிறபோது, அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக பல பேருந்துகள் அந்த வழியிலே இயக்கிக் கொண்டிருக்கிறார்கள்; அந்த வழித் தடங்களிலே அவர்கள் பயணம் செய்வதற்கு அவை ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 7, திரு. சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்.

7—

சிங்காநல்லூர் தொகுதி எஸ்.எஸ். குளம் ஒன்றியத்தில் கூட்டுறவு நூற்பாலை அமைத்தல்.

***36571–திரு. சிங்கை கோவிந்தராசு:**

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--